


**20. 07. 2025**

**தலைப்பு செய்திகள்**

- பிரதமர் திரு.நரேந்திரமோடி பிரிட்டன் மாலத்தீவு நாடுகளுக்கு அரசு முறை பயணமாக வரும் புதன்கிழமை புறப்படுகிறார்.

- நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரை சுமூகமாக நடத்த எதிர்கட்சிகளின் ஒத்துழைப்பு புதுதில்லியில் இன்று நடைபெற்ற அனைத்து கட்சி கூட்டத்தில் கோரப்பட்டது.

- தமிழகத்தில் 53 ஆயிரத்து 340 கோடி ரூபாய் பயிர் கடன் தள்ளுபடி வழங்கப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

- காவிரி நீர் பிடிப்பு பகுதிகளில் பெய்துவரும் மழை காரணமாக மேட்டூர் அணை நடப்பாண்டு 3ஆவது முறையாக இன்று நிரம்பியது.

- இந்திய இங்கிலாந்து இளையோர் அணிகளுக்கிடையிலான 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி chelmsford-இல் இன்று பிற்பகல் தொடங்குகிறது.

**இனி விரிவான செய்திகள்**

*********

பிரதமர்

பிரதமர் திரு.நரேந்திரமோடி அரசு முறை பயணமாக வரும் புதன்கிழமை பிரிட்டன் மாலத்தீவு நாடுகளுக்கு செல்கிறார்.

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்தியில் பிரதமர் இப்பயணத்தின்போது அந்நாட்டு தலைவர்களுடன் இருதரப்பு உறவுகள், பாதுகாப்பு ஒத்துழைப்பு, எரிசக்தி, வர்த்தகம் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பு தொடர்பான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார் என கூறியுள்ளது.

குஜராத் மாநிலம் கட்ச் பகுதியின் அழகை எடுத்துரைக்கும் TVS குழுமத்தின் புத்தக வெளியீட்டிற்கு பிரதமர் திரு.நரேந்திரமோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் TVS குழும தலைவர் திரு.வேணு ஸ்ரீனிவாசன் தம்மை சந்தித்தது குறித்து அவர் வெளியிட்ட செய்தியில் இருசக்கர மோட்டார் வாகனத்தில் கட்ச் பகுதியின் இயற்கை அழகை விவரிக்கும் இந்த புத்தகம் இளைஞர்களிடையே கட்ச் சுற்றுலா ஆர்வத்தை அதிகரிக்கும் என கூறியுள்ளார்.

இப்பகுதியின் கலாச்சாரம் நிலப்பரப்புகள் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் **"ரான் உத்ஸவ் 2025 கா.ஃபி டேபிள் புக்"** என்ற இப்புத்தகம் எடுத்துரைப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

*********

**மழைக்கால கூட்டத்தொடர்**

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் நாளை தொடங்குவதை ஒட்டி புதுதில்லியில் அனைத்து கட்சி கூட்டம் இன்று நடைபெற்றது.

நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு.கிரண் ரிஜிஜூ தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மழைக்கால கூட்டத்தொடரை சுமூகமாக நடத்த எதிர்கட்சியினரின் முழுமையான ஒத்துழைப்பு கோரப்பட்டது.

இக்கூட்டத்தில் மத்திய அமைச்சர்கள் திரு.ஜே.பி.நட்டா, திரு.அர்ஜுன் ராம் மெஹ்வால், டாக்டர் எல்,முருகன்,

காங்கிரஸ் கட்சியின் திரு.கவ்ரவ் கோகோய், திரு.பிரம்மோத் திவாரி,

திமுகவின் திரு.டி.ஆர்.பாலு, திருச்சி சிவா,

சமாஜ்வாதி கட்சியின் திரு.ராம்கோபால் யாதவ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

அடுத்த மாதம் 21-ம் தேதிவரை 21 அமர்வுகளாக நடைபெற உள்ள மழைக்கால கூட்டத்தொடரில் ஜன் விஷ்வாஷ் சட்ட திருத்த மசோதா, தேசிய விளையாட்டு ஆளுமை மசோதா, வணிக கப்பல் போக்குவரத்து மசோதா உள்ளிட்டவைகள் குறித்து விவாதிக்கப்படும் என தெரிகிறது.

*********

**ஹர்தீப்சிங் பூரி**

நாட்டின் எண்ணெய் தேவையில் சுய சார்பை எட்டும் நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக மத்திய பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு.ஹர்தீப்சிங் பூரி தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்ட செய்தியில் இதற்காக 10 லட்சம் சதுர கிலோ மீட்டர் எண்ணெய் கிணறுகளை தொடங்குவதற்கான வாய்ப்புகள் ஆராயப்பட்டுள்ளதாக கூறினார்.

இத்திட்டத்தின் கீழ் 99 சதவிகித பணிகள் நிறைவடைந்துள்ளதை சுட்டிக்காட்டிய அவர் இதன்மூலம் எண்ணெய் மற்றும் எரிவாயு தொழிற்சாலைகள் மற்றும் தொழில்முனைவோருக்கு மிகச்சிறந்த வாய்ப்புகள் கிடைக்கும் என நம்பிக்கை தெரிவித்தார்.

மத்திய அரசின் நகர எரிவாயு விநியோக சங்கிலி திட்டம் எரிசக்தி துறையில் புரட்சிகரமான மாற்றங்களை கொண்டுவந்துள்ளதாக அமைச்சர் பெருமிதம் தெரிவித்தார்.

*********

**சர்வதேச சதுரங்க தினம்**

சர்வதேச சதுரங்க தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

“ஒவ்வொரு நகர்வும் முக்கியத்துவம்” என்ற இந்தாண்டின் கருப்பொருளுடன் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

ஒருங்கிணைப்பு, கல்வி, ஆளுமை, மன நலத்திற்கான கருவியாக சதுரங்க போட்டிகள் திகழ்வது குறிப்பிடத்தக்கது.

*********

**தமிழக அரசு**

தமிழகத்தில் கூட்டுறவுத்துறை சிறப்பாக செயல்படுவதாக அரசு அறிவித்துள்ளது.

சென்னையில்இன்று வெளியான அறிக்கையில் ஏழை எளியோருக்கு உணவு பாதுகாப்பு, விவசாயிகளுக்கு தேவையான பயிர் கடன்கள், இடுபொருட்கள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கிடங்குகள் பராமரிப்பிற்காக மத்திய அரசு விருது வழங்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ள அரசு இத்துறையின் மூலம் ஆத்தூரில் புதிய கலை அறிவியல் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

கூட்டுறவுத்துறை மூலம் செயல்படுத்தப்படும் நல திட்டங்களை பட்டியலிட்டுள்ள அரசு, 66 லட்சத்து 25 ஆயிரம் விவசாயிகளுக்கு 53 ஆயிரத்து 340 கோடி ரூபாய் பயிர் கடன் தள்ளுபடி வழங்கியுள்ளதாக கூறியுள்ளது.

அண்ணல் அம்பேத்கார் வணிக முன்னோடி திட்டத்தின் கீழ் 52 கோடியே 34 லட்ச ரூபாய் தொழில்முனைவோர் கடன்,

225 கோடியே 94 லட்ச ரூபாய் மாற்றுத்திறனாளிகளுக்கான கடனுதவிகள்,

மகளிர் சுய உதவிக்குழு கடன் உச்சவரம்பு அதிகரிப்பு, உள்ளிட்ட பல்வே நல திட்டங்களை அரசு செயல்படுத்தி வருவதாக குறிப்பிட்டுள்ளது.

*********

**கே.ஆர்.பெரியகருப்பன்**

ஊரக பகுதிகளை மேம்படுத்தும் வகையில் சாலை, தெருவிளக்கு, குடிநீர் சுகாதாரம் அங்கன்வாடி உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்டவைகளை தமிழக அரசு மேம்படுத்தி வருவதாக மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

சிவகங்கையில் மாவட்ட ஊரக வளர்ச்சி துறை அலுவலர்களுக்கான 6 வாகனங்களை இன்று வழங்கி பேசிய அவர் இத்தகைய 198 வாகனங்கள் மாநிலம் முழுவதும் வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

*********

**ராஜேந்திரன்**

தமிழக அரசு கல்வித்துறை மேம்பாட்டிற்காக கூடுதல் கவனம் செலுத்தி வருவதாக மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.ராஜேந்திரன் கூறியுள்ளார்.

சேலம் கோகுலநாத இந்து மகாஜன பள்ளி நூற்றாண்டு விழாவில் பேசிய அவர், உயர்வுக்கு படி, புதுமைப்பெண், தமிழ்புதல்வன், கல்லூரி கனவு உள்ளிட்ட திட்டங்களின் மூலம் மாணாக்கரின் கல்வி உறுதி செய்யப்படுவதாக தெரிவித்தார்.

**வாய்ஸ்**

*********

**சேகர்பாபு**

தமிழகத்தில் திருக்கோவில்களுக்கு சொந்தமான 7 ஆயிரத்து 727 கோடி ரூபாய் மதிப்பிலான நிலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் பெரியபாளையம் அருள்மிகு ஸ்ரீபவானி அம்மன் திருக்கோவிலில் இன்று 20 ஆயிரம் பெண்களுக்கு மங்கல பொருட்கள் வழங்கும் திட்டத்தை தொடங்கிவைத்து பேசியஅவர் இதுவரை 3 ஆயிரத்து 386 திருக்கோவில்களில் குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

*********

**நயினார் நாகேந்திரன்**

தமிழகத்தில் வரும் சட்டப்பேரவை தேர்தலில் கூட்டணி ஆட்சி அமைந்ததும் நாகை மாவட்டம் உத்தமசோழபுரத்தில் தடுப்பணை கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு.நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

நாகையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் விவசாயிகளுக்கான மத்திய அரசின் நிதியை தமிழக அரசு முறையாக செலவிடவில்லை என குற்றம் சாட்டினார்.

தமிழகத்தின் நலனுக்கான பல்வேறு திட்டங்களை பிரதமர் திரு.நரேந்திரமோடி செயல்படுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

*********

**அணை**

**காவிரி நீர் பிடிப்பு பகுதிகளில் பெய்துவரும் மழை** காரணமாக மேட்டூர் அணை நடப்பாண்டு 3ஆவது முறையாக இன்று நிரம்பியுள்ளது.

**இதுகுறித்து எமது செய்தியாளர்**
**வாய்ஸ்**

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்று நண்பகல் வினாடிக்கு 43 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.

**இதனிடையே மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில்** மழை நீடிப்பதால் தென் மாவட்ட அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன.

நெல்லை மாவட்டத்தில் பாபநாசம் சேர்வலாறு மணிமுத்தாறு அணைகள் முழு கொள்ளளவை எட்டி வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

**தேனி மாவட்டம் சுருளி அருவியில்** வெள்ளபெருக்கு ஏற்பட்டுள்ளதை அடுத்து சுற்றுலா பயணிகள் குளிக்க 2ஆவது நாளாக இன்றும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

**நீலகிரி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக** முதுமலை தெப்பக்காடு நெடுஞ்சாலையில் யானைகள் வலம் வருவதால் வாகன ஓட்டிகள் எச்சரிக்கையுடன் செல்லுமாறு வனத்துறை அறிவுறுத்தியுள்ளது.

*********

**இருவரி**

**தமிழகத்தில் உள்ள பொறியியல் கல்லூரிகளில்** BEBTech உள்ளிட்ட படிப்புகளுக்கான மாணாக்கர் சேர்க்கைக்கான 2ஆம் கட்ட கலந்தாய்வு வரும் 26ஆம் தேதி தொடங்குகிறது.

**கால்நடை மருத்துவ படிப்புகளுக்கான கலந்தாய்வு** நாளை தொடங்குகிறது.

ஏழரை சதவிகித உள் ஒதுக்கீட்டிற்கான கலந்தாய்வு நேரடியாகவும் பொதுபிரிவினருக்கான கலந்தாய்வு இணையவழியிலும் நடைபெற உள்ளது.

**காஞ்சிபுரம் மாவட்டத்தில் பிரதமரின் சுரக்ஷா** பீமா யோஜனா காப்பீட்டு திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதாக மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திலீப் தெரிவித்துள்ளார்.

18 முதல் 70 வயதிற்குட்பட்டவர்கள் மாதம் 20 ரூபாய் செலுத்தி 2 லட்சம் ரூபாய் வரை காப்பீடு பெறும் இத்திட்டத்திற்கான சிறப்பு முகாம்கள் வரும் 30ஆம் தேதிவரை அனைத்து கிராம பஞ்சாயத்துகளிலும் நடைபெறும் என்று அவர் கூறியுள்ளார்.

*********

**மாட்டுவண்டி**

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் அழகுமுத்துகோனின் 268 ஆவது குருபூஜையை முன்னிட்டு இரட்டை மாட்டு வண்டி பந்தயம் இன்று நடைபெற்றது.

*********

**திண்டுக்கல்:**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே கருத்தலக்கம் பட்டியில் மீன் பிடி திருவிழா இன்று நடைபெற்றது. திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை, மதுரை உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து 5 ஆயிரத்திருக்கும் மேற்பட்டோர் இதில் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**… வாய்ஸ்….**

*********

**கோவில்**

ஆடி கிருத்திகையை ஒட்டி பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில், சுவாமிமலை உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு முருகன் ஆலயங்களில்அதிகாலை முதலே சிறப்பு அபிஷேகங்கள் பூஜைகள் நடைபெற்று வருகின்றன.

**திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி** திருக்கோவிலில் சுவாமிக்கு சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டு தங்க கவசம் வைர ஆபரணங்கள் சார்த்தப்பட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

**இதுகுறித்து எமது செய்தியாளர்**

**வாய்ஸ்**

*********

**கிரிக்கெட்**

**இந்திய** இங்கிலாந்து இளையோர் அணிகளுக்கிடையிலான 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி chelmsford-இல் இன்று பிற்பகல் மூன்றரை மணிக்கு தொடங்குகிறது.

2 போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதல் போட்டி ட்ராவில் முடிவடைந்தது.

*********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**